முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2021 யூலை

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2021-10-23
காலை
[08.45 – 12.00]

பக்கங்கள் : 12
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத தகவல்கள் இரண்டும் வணிகத் தீர்மானமெடுத்தலில் பிரதான பங்கினை வகிக்கின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) பட்டியலிடப்பட்ட கம்பனி (listed company) ஒன்றின் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் நிதி சாராத தகவல்கள் மூன்றினை (03) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் பிரதான நோக்கத்தைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

இலங்கை பிணைகள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு (Securities and Exchange Commission) 1987 இல் தாபிக்கப்பட்டதுடன், இதுவே கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் பிரதான ஒழுங்குபடுத்துநராக இருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) இலங்கை பிணைகள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவைத் தாபித்தமைக்கான நோக்கங்கள் இரண்டினை (02) **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) இலங்கை பிணைகள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் மூன்று (03) கடமைகளையும் (duties) தொழிற்பாடுகளையும் (functions) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

நிதி அறிக்கையிடலின் எண்ணக்கருசார் வேலைச்சட்டகமானது நிதி அறிக்கையிடல், பயன்தரும் நிதித் தகவல்களின் தரப் பண்புகள், மூலகங்களை வரையறை செய்தல், ஏற்பிசைவு செய்தல் மற்றும் அளவீடு செய்தல், மூலதனம் மற்றும் மூலதனப் பராமரிப்பு எண்ணக்கருக்கள் ஆகியவற்றின் நோக்கங்களைக் கையாள்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) "நிதி மூலதனப் பேணுகை எண்ணக்கருவை பௌதிக மூலதனப் பேணுகை எண்ணக்கருவிலிருந்து" **வேறுபடுத்துக.** (03 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது மேற்கொள்ளப்படும் உள்ளார்ந்த எடுகோளைக் (underlying assumption) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களுக்கான (SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றும் ஒரு நடுத்தர அளவு நிறுவனமான **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துள்ளது.

எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களில் கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன :

(1) கட்டடத்தின் நிருமாணத்திற்கு ஏற்புடையதான கடன்படுகைக் கிரயம், அந்தக் கட்டடத்தின் கிரயத்திற்கு மூலதனமாக்கப்பட்டுள்ளது.

(2) கிரயத்தில் அல்லது நிகர தேறுகைப் பெறுமதியில் எது குறைவானதோ அந்தப் பெறுமதியில் தொக்குகள் மதிப்பிடப்படுகின்றன.

(3) அலுவலக உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் ஆண்டின் காலப்பகுதியில் மாற்றப்பட்டுள்ளது. இதன் தாக்கமானது முன்னைய ஆண்டுகளில் பிற்தேதியிடப்படுவதற்காகச் சீராக்கம் செய்யப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

சிறிய மற்றும் நடுத்தர அளவுள்ள நிறுவனங்களுக்கான (SMEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களின்படி, மேற்படி கணக்கீட்டுச் செய்கைகள் (accounting treatments) ஒவ்வொன்றினதும் செல்லுபடித்தன்மையை (validity) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட என்றிச் பூட்ஸ் (தனியார்) கம்பனியின்** 2021 மார்ச் 31 மற்றும் 2020 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட என்றிச் பூட்ஸ் (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2021 | 2020 |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 18,500 | 14,000 |
| திரண்ட தேய்மானம் | (3,250) | (2,200) |
| **முன்கொணரற் பெறுமதி** | **15,250** | **11,800** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 3,100 | 3,800 |
| வியாபார வருமதிகள் | 2,700 | 2,240 |
| காசும் காசுச் சமானங்களும் | 500 | 2,100 |
| | **6,300** | **8,140** |
| **மொத்தச் சொத்துக்கள் :** | **21,550** | **19,940** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 10,000 | 10,000 |
| கைக்கொள் இலாபம் | 4,200 | 2,700 |
| | **14,200** | **12,700** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 2,050 | 2,450 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | 2,400 | 2,100 |
| | **4,450** | **4,550** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 2,020 | 1,640 |
| குறுங் காலக் கடன்கள் | 250 | 250 |
| செலுத்த வேண்டிய வட்டி | 220 | 380 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 410 | 420 |
| | **2,900** | **2,690** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **21,550** | **19,940** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி காணி ஒன்றினைக் கையகப்படுத்தியிருந்தது. அதனைத் தவிர ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கு வேறு எவ்வித சேர்த்தல்களோ அல்லது அகற்றல்களோ மேற்கொள்ளப்படவில்லை.

(2) ஆண்டிற்கான கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூபா 300,000/-.

(3) ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி அதன் சாதாரண பங்குதாரர்களுக்கு ரூபா 200,000/- இடைக்காலப் பங்கிலாபத்தைச் செலுத்தியிருந்தது.

(4) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்கள் ரூபா 190,000/-.

(5) ஆண்டின் காலப்பகுதியில் பணிக்கொடைக்கான கொடுப்பனவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

<u>நேரில் முறையைப் பயன்படுத்தி,</u> 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட என்றிச் பூட்ஸ் (தனி.) கம்பனிக்காக** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(a) **வரையறுக்கப்பட்ட மெக்ரோ டெக்னோலொஜிஸ் கம்பனி (MTL)** சகலவிதமான மென்பொருள் களையும் விற்பனை செய்வதில் ஈடுபடுவதுடன் பராமரிப்பு சேவைகளையும் வழங்குகிறது. 2020 ஏப்ரல் 01 இல், **MTL** ஆனது ரூபா 600,000/- இற்கு 2 ஆண்டுகளுக்கான பராமரிப்புச் சேவையுடன் தொக்கு முகாமை மென்பொருள் ஒன்றை வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றை **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனியுடன்** செய்து கொண்டது. இவற்றைத் தனித்தனியாக விற்பனை செய்யின், மென்பொருளின் சந்தை விலை ரூபா 300,000/- ஆக இருக்கும் என்பதுடன் பராமரிப்புச் சேவைக் கட்டணம் மாதமொன்றுக்கு ரூபா 10,000/- ஆகவும் இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் என்ற நியமத்தின்படி, வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்காக **MTL** இன் 2021 மார்ச் 31 மற்றும் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) 2020 ஏப்ரல் 01 இல் **வரையறுக்கப்பட்ட சங்கா கம்பனியின்** ஏடுகளில் கீழ்வரும் மீதிகள் காணப்பட்டன :

| | **ரூபா** |
|---|---|
| இயந்திரக் கணக்கு | 10,000,000 |
| திரண்ட தேய்மானம் - இயந்திரம் | 4,000,000 |

மேற்படி இயந்திரக் கணக்கு ஒரு இயந்திரத்தை உள்ளடக்கியுள்ளது. இயந்திரத்தைக் கையகப் படுத்திய நேரத்தில் இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகள் என மதிப்பிடப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 ஏப்ரல் 01 இல் மேற்கொள்ளப்பட்ட இயந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் பற்றிய மீளாய்வைத் தொடர்ந்து, 2020 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் மீதமாகவுள்ள பயன்தரும் ஆயுட்காலம் 8 ஆண்டுகளெனக் கண்டறியப்பட்டது. **வரையறுக்கப்பட்ட சங்கா கம்பனி** கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் இயந்திரத்தைத் தேய்மானம் செய்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின்படி, 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயந்திரத்தின் தேய்மானக் கட்டணத்தைக் (depreciation charge) **கணிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) LKAS 23 – கடன்படுகைக் கிரயம் என்ற நியமத்தின்படி, "தகைமைச் சொத்து (Qualifying Asset)" என்னும் பதத்தினை தகைமைச் சொத்துக்களுக்கான இரண்டு (02) உதாரணங்களுடன் **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(b) 2020 யூலை 01 இல், **வரையறுக்கப்பட்ட சல்மா கம்பனி** புதிய தொழிற்சாலைக் கட்டடம் ஒன்றின் நிருமாணத்தை ஆரம்பித்தது. இந்த நோக்கத்திற்காக, கம்பனி 2020 ஏப்ரல் 01 இல் ஒவ்வொன்றும் ரூபா 100/- பெறுமதியான 100,000 தனிச்சங்களை விநியோகித்தது. தனிச்சங்கள் மீது ஆண்டொன்றிற்கு 10% இல் வருடாந்தம் வட்டி செலுத்தப்பட வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, 2020 ஏப்ரல் 01 இல், கம்பனி, மூலதனத்தின் மீள்கொடுப்பனவுக்கான ஒரு வருட சலுகைக் காலத்துடன் 10 ஆண்டுகளில் செலுத்தப்பட வேண்டிய 12% என்ற வருடாந்த வட்டி வீதத்தில் **ABC வங்கியிடமிருந்து** இந்தக் கட்டடத்தின் நிருமாணத்திற்காக ரூபா 5 மில்லியன் நீண்ட காலக் கடனொன்றைப் பெற்றுக் கொண்டது.

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது கட்டடத்தின் நிருமாணத்திற்காக ரூபா 12,000,000/- இனைப் பயன்படுத்தியிருந்ததுடன் 2021 மார்ச் 31 இல் நிருமாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. கடன் மற்றும் தனிச்சங்களின் மீதித் தொகை நிலையான வைப்பொன்றில் தற்காலிகமாக முதலீடு செய்யப்பட்டதுடன் ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 160,000/- வட்டியாகச் சம்பாதிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் கட்டடத்தின் புத்துருவாகும் வேலையின் (WIP) கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்படுகைக் கிரயத்தைக் (borrowing cost) **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதி, 2021 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட நஸீன் கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும் :

**வரையறுக்கப்பட்ட நஸீன் கம்பனி**

**2021 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணியின் கிரயம் ரூபா 25 மில்லியன்) | 37,500 | |
| பொறி மற்றும் இயந்திரம் | 6,250 | |
| மோட்டார் வாகனம் | 9,600 | |
| **திரண்ட தேய்மானம் - 2020 ஏப்ரல் 01 இல் :** | | |
| கட்டடம் | | 7,500 |
| பொறி மற்றும் இயந்திரம் | | 3,750 |
| மோட்டார் வாகனம் | | 5,000 |
| தொக்கு – 2021 மார்ச் 31 இல் | 8,920 | |
| வியாபார வருமதிகள் | 14,180 | |
| முற்பணக் கணக்கு | 2,806 | |
| முற்கொடுப்பனவுகள் | 1,200 | |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 805 | |
| வங்கிக் கடன் | | 3,600 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | | 1,250 |
| வியாபார சென்மதிகள் | | 6,800 |
| செலுத்த வேண்டிய வருமான வரி – 2020 ஏப்ரல் 01 இல் | | 720 |
| ஐயுறவுக்கடன் ஏற்பாடு | | 3,000 |
| மோட்டார் வாகன விற்பனை மூலம் பெற்ற காசு | | 4,500 |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 67,760 | 100,400 |
| பணிப்பாளர்கள் கட்டணம் | 1,200 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 270 | |
| ஏனைய நிருவாகச் செலவினங்கள் | 10,240 | |
| விநியோகச் செலவினங்கள் | 7,210 | |
| வட்டிச் செலவினங்கள் | 718 | |
| செலுத்திய வருமான வரி | 2,000 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் | 1,000 | |
| குறிப்பிடு மூலதனம் (700,000 சாதாரண பங்குகள்) | | 7,000 |
| கைக்கொள் இலாபம் – 2020 ஏப்ரல் 01 இல் | | 28,139 |
| | **171,659** | **171,659** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 50 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரம் | : | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 05 ஆண்டுகள் |

(2) பேரேட்டில் 9.6 மில்லியன் கிரயமாகப் பதிவு செய்யப்பட்டிருந்த மோட்டார் வாகனம் 2020 டிசெம்பர் 31 இல் ரூபா 4.5 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. ஆயினும் விற்பனை மூலம் பெறப்பட்ட காசுக்கான பதிவைத் தவிர இது இன்னும் பேரேடுகளில் நிகழ்நிலைப்படுத்தப்படவில்லை (Not updated). இந்த வாகனத்தின் விற்பனை வருமானமானது மோட்டார் வாகனக் கணக்கில் விற்பனை மூலம் பெறப்பட்ட காசில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3) 2020 ஏப்ரல் 01 இல் நிதிக் குத்தகை ஒன்றின் கீழ், ஆண்டின் காலப்பகுதியில் ஒரு புதிய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. குத்தகைக்குப் பெறப்பட்ட மோட்டார் வாகனத்தின் சீர்மதிப்பு (Fair value) ரூபா 5 மில்லியனாக இருந்ததுடன் குத்தகைக் காலம் 5 ஆண்டுகள் ஆகும். வருடாந்த குத்தகை தவணைக் கொடுப்பனவாக ரூபா 806,000/- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆந் திகதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். உள்ளார்ந்த (Implicit) வட்டி வீதம் ஆண்டிற்கு 11 % ஆகும். மோட்டார் வாகனத்தின் உரிமை, குத்தகைக் கால முடிவில் **வரையறுக்கப்பட்ட நஸீன் கம்பனிக்கு** மாற்றப்படும். மோட்டார் வாகனத்திற்காகச் செலுத்தப்பட்ட உடனடிக் கொடுப்பனவு (Down payment) ரூபா 2 மில்லியனாக இருப்பதுடன் 01 ஆவது தவணைக் கொடுப்பனவு ரூபா 806,000/- முற்பணக் (Advance) கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது தவிர இந்த விடயம் தொடர்பில் கணக்கேடுகளில் வேறெந்தப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

(4) முற்கொடுப்பனவுக் (Pre-payment) கணக்கானது நாட்காட்டி வருடம் 2021 இற்காக முன்னரே (advance) செலுத்தப்பட்ட வாடகையைக் கொண்டிருக்கிறது. மாதாந்த வாடகை ரூபா 100,000/- ஆகும்.

(5) கீழ்வரும் செலவினங்கள் 2021 மார்ச் 31 இல் கணக்கேடுகளில் அட்டுறுவாகியிருக்கவில்லை :

- 2021 மார்ச் மாதத்திற்கான இணையம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் - ரூபா 55,000/-
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 500,000/-

(6) 2021 மார்ச் 31 இல் உள்ள வங்கிக் கடன் மீதியில் அரைவாசி (½) ஆனது 2021/22 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

(7) 2021 மார்ச் 31 இல், ரூபா 2.5 மில்லியன் நிலுவை மீதியைக் கொண்டிருந்த வாடிக்கையாளர் ஒருவர் அதனை 360 நாட்களுக்கும் மேலாகத் தீர்ப்பனவு செய்யாதிருந்தார். இந்தத் தொகை கணக்குகளில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரலில் அந்த வாடிக்கையாளரால் ரூபா 2.2 மில்லியன் தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டது. மீதித் தொகையினை 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் அறவிடமுடியாக் கடனாக பதிவழிப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(8) வரிமதிப்பாண்டு 2020/21 இற்கான வரிப் பரிப்பு ரூபா 1.5 மில்லியனாக மதிப்பிடப்பட்டது.

(9) கம்பனியின் பணிப்பாளர் சபை நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்காக அவற்றை 2021 மே 30 ஆந் திகதி அங்கீகரித்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்புக்குப் பொருத்தமான வடிவில் **வரையறுக்கப்பட்ட நஸீன் கம்பனிக்காக** கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (10 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(c) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (02 புள்ளிகள்)

(d) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

கீழ்வரும் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சிந்து கம்பனி (SDL)** மற்றும் **வரையறுக்கப்பட்ட பிந்து கம்பனி (BDL)** ஆகியவற்றின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**முற்றடக்க வருமானக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | **SDL** | **BDL** |
|---|---|---|
| விற்பனை | 57,400 | 13,602 |
| விற்பனைக் கிரயம் | (36,200) | (7,248) |
| **மொத்த இலாபம்** | **21,200** | **6,354** |
| **ஏனைய வருமானம் :** | | |
| ஆலோசனைச் சேவை வருமானம் | 300 | - |
| பிற வருமானம் | 1,200 | 1,000 |
| **செலவினங்கள் :** | | |
| விநியோகச் செலவினங்கள் | (7,200) | (1,170) |
| நிருவாகச் செலவினங்கள் | (4,680) | (2,580) |
| நிதிச் செலவினங்கள் | (690) | (210) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **10,130** | **3,394** |
| வருமான வரி | (180) | (30) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **9,950** | **3,364** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) **SDL** ஆனது **BDL** இன் சாதாரண பங்கு மூலதனத்தின் 80% மானவற்றை 2020 ஏப்ரல் 01 இல் ரூபா 42 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. அதே நாளில், **BDL** இன் இனங்காணத்தக்க நிகரச் சொத்துக்களின் சீர்மதிப்பு ரூபா 45 மில்லியனாக இருந்ததுடன் கட்டுப்பாடற்ற நாட்டத்தின் சீர்மதிப்பு ரூபா 6 மில்லியனாக இருந்தது.

(2) ஆண்டின் காலப்பகுதியில், **BDL** ஆனது ரூபா 8 மில்லியன் கிரயமான பொருள்களை கிரயத்தில் 25% இலாப எல்லை வைத்து **SDL** இற்கு விற்பனை செய்தது. 2021 மார்ச் 31 இல் ரூபா 4 மில்லியன் பெறுமதியான தொக்கு, விற்பனை செய்யப்படாது **SDL** இன் களஞ்சியத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(3) ஆண்டின் காலப்பகுதியில், **SDL** ஆனது மாதமொன்றுக்கு ரூபா 25,000/- என்ற அடிப்படையில் **BDL** இற்கு ஆலோசனை சேவைகளை வழங்கியிருந்தது.

(4) 2020 ஏப்ரல் 01 இல், **BDL** ஆனது ரூபா 4,000,000/- இற்கு இயந்திரமொன்றை **SDL** இற்கு விற்பனை செய்தது. அந்தத் திகதியில் **BDL** இன் ஏடுகளில் இது ரூபா 3,000,000/- முன்கொணரற் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2020 ஏப்ரல் 01 இல் இயந்திரத்தின் மீதமுள்ள பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக இருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒன்றித்தலால் ஏற்படும் நன்மதிப்பை (goodwill) **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (09 புள்ளிகள்)

(மொத்தம் 13 புள்ளிகள்)

## வினா 10

கீழ்வரும் நிதிக் கூற்றுக்கள் 2020/21 மற்றும் 2019/20 ஆகிய ஆண்டுகளுக்கான **அலெக்ஸ் PLC** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**அலெக்ஸ் PLC**

**2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**முற்றடக்க வருமானக் கூற்று**

| | **ரூபா '000** |
|---|---|
| விற்பனை | 378,500 |
| விற்பனைக் கிரயம் | (265,900) |
| **மொத்த இலாபம்** | 112,600 |
| பிற வருமானம் | 14,650 |
| | 127,250 |
| **செலவினங்கள் :** | |
| விநியோகச் செலவினங்கள் | (24,780) |
| நிருவாகச் செலவினங்கள் | (49,540) |
| நிதிச் செலவினங்கள் - கடன்கள் மீதான வட்டி | (8,200) |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **44,730** |
| வருமான வரி | (950) |
| **ஆண்டிற்கான இலாபம்** | **43,780** |

**அலெக்ஸ் PLC**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | 2021 மார்ச் 31 இல் | | 2020 மார்ச் 31 இல் | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள் :** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | | 169,800 | | 100,500 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | | |
| தொக்கு | 29,000 | | 32,500 | |
| வியாபார வருமதிகள் | 39,000 | | 38,200 | |
| ஏனைய வருமதிகள் | 2,500 | | 3,000 | |
| காசும் காசுச் சமானங்களும் | 4,200 | 74,700 | 18,500 | 92,200 |
| **மொத்தச் சொத்துக்கள் :** | | **244,500** | | **192,700** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | | | |
| **உரிமையாண்மை :** | | | | |
| குறிப்பிடு மூலதனம் | 90,000 | | 90,000 | |
| கைக்கொள் இலாபம் | 78,000 | 168,000 | 39,500 | 129,500 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | | | |
| நீண்ட காலக் கடன் | 18,000 | | 12,000 | |
| ஊழியர் நன்மைகள் | 16,500 | 34,500 | 20,500 | 32,500 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | | | |
| வியாபார சென்மதிகள் | 34,000 | | 29,600 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 500 | | 400 | |
| அட்டுறு செலவினங்கள் | 7,500 | 42,000 | 700 | 30,700 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **244,500** | | **192,700** |

2020/21 ஆம் ஆண்டிற்கான கீழ்வரும் தொழில்துறைச் சராசரிகளும் (industry averages) இனங்காணப் பட்டுள்ளன :

| | |
|---|---|
| மொத்த இலாப விகிதம் | 35 % |
| நிகர இலாப விகிதம் | 12 % |
| நடைமுறை விகிதம் | 2.5 : 1 |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 45 நாள்கள் |
| தொக்கு இருப்புக் காலம் | 40 நாள்கள் |
| வட்டிக் காப்பு | 5 தடவைகள் |

*சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகக் கருதுக.*

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2021 மார்ச் 31 இல் / முடிவடைந்த நிதியாண்டிற்கான மேற்படி தகவல்களின் அடிப்படையில் கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம்

(iii) நடைமுறை விகிதம்

(iv) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(v) தொக்கு இருப்புக் காலம்

(vi) வட்டிக் காப்பு (Interest Cover) (06 புள்ளிகள்)

(b) மேலே இனங்காணப்பட்ட தொழில்துறைச் சராசரிகளைக் கவனத்தில் கொண்டு 2021 மார்ச் 31 இல் / முடிவடைந்த ஆண்டிற்கான **அலெக்ஸ் PLC** இன் செயலாற்றுகையைப் **பகுப்பாய்வு செய்க.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |